பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்பி

மலர்: 16] சென்னை: ஆடி 30 (14—8—68) புதன் ★ வெளியூர்: ஆடி 31 (15—8—68) வியாழன் [இதழ்: 52

அதிக விளைச்சல் தரும் புதிய கோதுமை!

அதிக விளைச்சல் தரும் 'ஏ. டி. டி. 27' ரகம் போன்ற புதிய நெல் வகைகள் இப்போது பல நாடுகளில் பயன்படுத்தப் படுகின்றன அல்லவா? அதே போல், அதிக விளைச்சலைத் தரக்கூடிய கோதுமை ஒன்று பிரிட்டனில் ஆராய்ந்து கண்டு பிடித்துள்ளனர்.

சில மாதங்களுக்கு முன்பு விளைச்சல் தரும் கோதுமையில் இரு புதிய ரகங்கள் அறிமுகப் (4-ம் பக்கம் பார்க்க)

தோழமை — அரசியலில் அவசியம்

சனநாயகப் பண்புக்கு அது அடிப்படை

காற்றடிக்கும் பக்கம் சாய்வது உறுதியன்று!

முதலமைச்சர் அண்ணா தெளிவுரை

சென்னை, ஆக. 14—

"சனநாயக நாட்டில் பல்வேறு அரசியல் கட்சிகள் இருந்து தீரவேண்டும்; பல கட்சிகள் இருந்தால்தான் சனநாயகம் வளர்ச்சி பெறும்; அப்படி இருப்பதைத் தான், 'சனநாயகம்' என்கிறோம்.

"அரசியல் கட்சிகள் இருப்பதனாலேயே ஒருவருக்கொருவர் பகையும், காழ்ப்பும்கொண்டு நட்புரிமையைப் பாழ்படுத்திக்கொள்ள வேண்டுமென்பதில்லை; ஒருவருக்கொருவர் தோழமை உணர்வோடு பழக வேண்டும்.

"உள்ளபடியே ஒருவரை ஒருவர் பகைத்துக்கொள்ளாமல் இருக்கிற உறுதிதான் உண்மையான உறுதி. காற்றடித்தால் சாய்கின்ற உறுதி, உண்மையான உறுதியல்ல!

"கதிர் இருக்கும்போது வரும் காட்டுக் குருவிகள், பழம் பழுத்திருக்கும்போது வரும் பறவைகள் போன்றவர்கள், காரியம் முடிந்ததும் போய்விடும் தன்மையுள்ளவர்கள்"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், நேற்று கோகலே மண்டபத்தில் நடைபெற்ற டி. செங்கல்வராயன் எம்.பி. அவர்களின் 61-வது ஆண்டு பிறந்தநாள் விழாவில் சிறப்புரையாற்றுகையில் விளக்கினார்கள்.

செட்டிநாட்டரசர் முத்தையா செட்டியார் தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலம், சித்ரா நாராயணசாமி, ஆர். எம். சேஷாத்திரி, அட்வகேட்-ஜெனரல் நாராயணசாமி, ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ. ஆகியோர் பாராட்டுரை வழங்கினர்.

திரு. டி. செங்கல்வராயன் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

முரண்பாடு இல்லை — வேறுபாடு இருக்கிறது!

முதலமைச்சர் அண்ணா அவர்கள், திரு செங்கல்வராயன் அவர்களுடன் தமக்கிருந்த தொடர்புகளையும், அரசியல் துறையில் வெவ்வேறு கோணங்களில இருந்தாலும பற்றும் உறுதியும் பாழ்படாமலிருப்பதையும், காங்கிரசு இயக்கததில் அவர் சிறந்த தொண்டாற்றியும் கூட வாழ்க்கையில் அவருக்கு எவ்விதப் பலனும் கிட்டாததையும், எனினும் அதற்காக அவா, 'இடம் தேடி அலையும்' அரசியல்வாதியாக மாறிவிடாமல் இருந்துவருவதையும் விளக்கிக் கூறிவிட்டு, மேலும் குறிப்பிட்டதாவது:—

"சுதந்தரப் போராட்டம் நடந்த போதிருந்த அரசியல் சூழ்நிலைக்கும்—இப்போது இருக்கும் அரசியல் சூழ்நிலைக்கும முரண்பாடு இல்லை என்றாலும் வேறுபாடு இருக்கிறது.

ஒரு கட்சியில் இருந்தாலும் மற்ற கட்சியிலுள்ளவர்களையும் மதிக்கும் பண்பாடு ஏற்பட வேண்டும். அது கடினமான காரியம்; சுலபத்தில வராது; இருந்தாலும், நாம் வரவழைத்துக்கொள்ளத்தான் வேண்டும.

பெற்ற அனுபவம் எது — பெறாத அனுபவம் எது?

என்னைச் சந்தித்த நண்பர் ஒருவர், 'உங்களுக்கு ஆட்சி செய்ய அனுபவம் போதாது என்று குறை சொல்கிறார்கள்' என்றார்; அதற்கு நான், 'அது குறையல்ல; உண்மையைச் சொல்கிறார்கள்; புதிதாக ஆட்சிப பொறுப்பேற்றவர்களுக்கு அனுபவம் இல்லை என்பது சரியானதுதானே! எது சரியில்லை என்றால், பல ஆண்டுக் காலம் தொடர்ந்தாற்போல் ஆட்சி செய்த பிறகும் அனுபவம் வரவில்லையென்றால் அதுதான் குறை' என்றேன்!

நிலவிவந்த பண்பாடு வேகமாக மாறிவிட்டது

முன்பு அரசியலில் நிலவிவந்த பண்பாட்டு நிலைமை இப்போது வேகமாக மாறிவிட்டிருக்கிறது; மாற்றுக் கட்சியினரைப் பார்க்கும்போது, வரமுடியாத கோபத்தை வரவழைத்துக் கொண்டு பேசுவதுதான், 'கட்சிப் பற்று—கட்சியில் உறுதி' என்று நினைக்கிறார்கள்.

பகையை மூட்டித்தான் கட்சிக்கு உறுதியாக இருப்பதைத் தெரிவித்துக்கொள்வது என்பது—இயற்கையாக நரம்பு தளர்ந்து போனபிறகு சாது புஷ்டி லேகியம் சாப்பிடுவதற்கு ஒப்பானது! எவ்வளவு விரைவில் அந்த மருந்தினால் நரம்பு முறுக்கேறுகிறதோ, அதைவிட வேகமாக அது தளர்ந்துவிடும்!

அறிவிப்பு

சுதந்தர நாளை முன்னிட்டு 15—8—68 வியாழக்கிழமை நமது அலுவலகத்திற்கு விடுமுறையாகையால், 'நம் நாடு' அடுத்த இதழ் 16—8—68 அன்று சென்னையிலும், மறு நாள் வெளியூர்களிலும் கிடைக்கும்.

—பொறுப்பாளர்

கழகத் தேர்தல்

மாவட்டக் கழகத் தேர்தல் முடிவுகள்

சென்னை, ஆக. 14—

இன்று நடைபெற்ற மாவட்டக் கழகத் தேர்தல்களில் இதுவரையில் கிடைத்துள்ள முடிவுகள்:—

தஞ்சை மாவட்டம்

செயலாளர் பொறுப்புக்குத் தோழர் **மன்னை ப. நாராயணசாமி** தேர்ந்தெடுக்கப்பட்டார்.

திருச்சி மாவட்டம்

செயலாளர் பொறுப்புக்குத் தோழர் **அன்பில் தருமலிங்கம்** போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

நெல்லை மாவட்டம்

செயலாளர் பொறுப்புக்குத் தோழர் **இரத்தினவேல்பாண்டியன்** தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மதுரை மாவட்டம்

செயலாளர் பொறுப்புக்குத் தோழர் **எஸ். முத்து எம்.எல்.சி.** தேர்ந்தெடுக்கப்பட்டார்.

முகவை மாவட்டம்

செயலாளர் பொறுப்புக்குத் தோழர் **எஸ். எஸ். தென்னரசு** தேர்ந்தெடுக்கப்பட்டார்.

செங்கற்பட்டு மாவட்டம்

செயலாளர் பொறுப்புக்குத் தோழர் **கே. டி. எஸ். மணி** தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சிந்தித்துச் செயல்படுகின்றார் அண்ணா

ஏழைகள் வாழ்வு உயரும்வரை அவருடைய பணி தொடரும்!

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். புகழாரம்

சென்னை, ஆக. 14—

"அறிஞர் அண்ணா அவர்கள் தனக்காகச் சிந்திக்காமல், நாட்டுக்காக — நாட்டின் மானத்திற்காக — மொழியின் சுதந்தரத்திற்காகச் சிந்தித்தவர் — சிந்திப்பவர்!

"'ஏற்றத் தாழ்வு நீங்க வேண்டும்; ஏழைகளின் வாழ்வு உயர வேண்டும்' என்பது தி. மு. கழகத்தின் கொள்கையாகும்; இந்த எண்ணம் ஈடேறும்வரையில் தி. மு. கழகத்தின் பணி என்றென்றைக்கும் தொடரும்!

"தி. மு. கழகம் ஆட்சியை விட்டுப் போகவேண்டுமா என்பது பற்றி மக்கள்தான் தீர்ப்பளிக்க வேண்டும்; மத்திய ஆட்சியால் சொல்ல முடியாது; அப்படிச் சொல்லப்படுமானால் அது சனநாயகமும் ஆகாது!

"காங்கிரசு ஆட்சிக்கு எதிராகத்தான் தமிழகத்தில் தி. மு. க.-வுக்கு மக்கள் வாக்களித்திருக்கிறார்கள் — புத்தாட்சி மலரச் செய்திருக்கிறார்கள்!

"தி. மு. கழகத்தின் தத்துவங்களை ஏற்றுக்கொண்டு — அதன் மொழிக் கொள்கையை ஒப்புக்கொண்டுதான் காங்கிரசுக்கு எதிராக 25 நாடாளுமன்ற உறுப்பினர்களை டில்லிககு அனுப்பியிருக்கிறார்கள்!

அறிஞர் அண்ணா அவர்கள் தமிழுக்காக — தமிழர்களின் சீரிய வாழ்வுக்காகத தன்னை அர்ப்பணித்துக்கொண்டவர்! சிலர் சொல்லுவார்கள் — செய்யமாட்டார்கள்! அண்ணா அவர்களோ, சொல்லுவதைச் செய்வார் — செய்வதைத்தான் சொல்லுவார்!

"மாணவர்கள் அமைதியோடு சிந்தித்துப் பணியாற்றினால் எந்தக் காரியத்தையும் சாதிக்க முடியும். மாணவர்களின் ஏற்றத்திற்காகப் பாடுபடும் அண்ணா அவர்களின் படத்தைத் திறந்து வைப்பது பெருமைக்குரியதாகும்"

இவ்வாறு புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள், பச்சையப்பன் கல்லூரியில் — தமிழ்ச் சங்கச் சார்பில் — அறிஞர் அண்ணா அவர்களின் உருவப் படத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில் விளக்கிக் கூறினார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"எதிர்ப்பு இருந்தால்தான் ஒருவர் வளர்ச்சி பெறமுடியும்; எதிர்ப்புதான் சேவை மனப்பான்மையைத் தூண்டிவிடுகிறது.

ஒவ்வொருவரும் எதிர்ப்பைச் சந்திக்க வேண்டும் — எதிர்ப்பு இருந்தே தீர வேண்டும்; ஆனால் எதிர்ப்பைக் காண்பிக்கின்றவர்கள், அந்தத் தகுதியுடையவர்களாகவும் இருக்க வேண்டும்.

மறைமுகமாகவோ, பின்னாலோ இருந்துகொண்டு எதிர்ப்பைத் தெரிவிப்பது, தகுதியானவர்களின் செயலல்ல!

அண்ணா அவர்களின் படம் திறக்கப்படுகின்ற இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்வேன் — எதிர்ப்பைச் சமாளிக்கும் பக்குவத்தை — நல்லுணர்ச்சியை நாம் வகுத்துக்கொள்ள வேண்டும்; எதையும் தாங்கும் இதயத்தைப் பெற வேண்டும்.

அரசியலிலானாலும், தனிப்பட்ட முறையிலானாலும், கருத்து மாற்றம் இருக்கலாம்; அப்போதுதான் சனநாயகப் பண்பாடு வளரும்."

லாட்டரிச் சீட்டு விற்பனை விழா

ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங் துவக்கிவைப்பார்

சென்னை, ஆக. 14—

தமிழக அரசின் லாட்டரிச் சீட்டு விற்பனை விழா, 15—8—68 காலை 10-மணியளவில், இராஜாஜி மண்டபத்தில் நடைபெறுகிறது; ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங், திட்டத்தைத் தொடங்கிவைப்பார்.

விழாவில், முதலமைச்சர் அண்ணா அவர்களும், மற்றும் எல்லா அமைச்சர்களும் கலந்து கொள்கின்றனர்.

லாட்டரிச் சீட்டுத் திட்டத்தை ஆளுநர் தொடங்கிவைத்து, முதல் சீட்டை அவரே விற்பனை செய்வார்; அமைச்சர்களும் முக்கியப் பிரமுகர்களும் பணம் கொடுத்து லாட்டரிச் சீட்டைப் பெறுவர்.

பொதுமக்களுக்கான விற்பனை, ஆக. 16-ம் நாளன்று தமிழகம் முழுவதிலும் தொடங்குகிறது.

தமிழ் மொழியின் ஏற்றத்திற்கு முழு வலிவைப் பயன்படுத்துவோம்!

யாராவது நல்லவர்--எவராவது வல்லவர் வரும் வரையில் அரசியலில் ஈடுபடவேண்டிய அவசியமிருக்கிறது

சென்னை, ஆக. 14—

"இலக்கிய விழாவில் கலந்துகொள்கின்ற நேரத்தில் இலக்கியத்தில் முழுத் தேர்ச்சி பெற்றிருக்காவிட்டாலும், எனக்கிருக்கின்ற சூழல்களுக்கிடையே இத்துறையில் முழுக் கவனம் செலுத்த முடியாத குறையினை உணருகிறேன்.

"அரசியல் துறையில் நான் ஈடுபடாதிருப்பேனானால், இலக்கியத் துறையில்தான் என்னை முழுதும் ஈடுபடுத்திக்கொண்டிருப்பேன்; ஆனால் அரசியலில் சில காலமாகவாவது நீடித்திருக்க வேண்டிய நிலை இருக்கிறது; யாராவது நல்லவர்கள் வருகின்ற வரையிலாவது—எவராவது வல்லவர்கள் வருகின்ற வரையிலாவது நாங்கள் இருந்துதீர வேண்டியிருக்கிறது.

"நல்லவர்கள் இந்தத் துறைக்கு வந்தால்கூட அவர்கள் செய்கின்ற காரியம் நாம் விரும்புகின்ற காரியமாக இல்லாமல்கூட இருக்கலாம். ஆகவே, அரசியலில் இருந்துகொண்டு சாதிக்க முடிந்ததைவிட, இலக்கியத் துறையில் ஈடுபாடு கொண்டவர்கள் அதிகம் சாதிக்க முடியும் என்பதில் நான் அசையாத நம்பிக்கை கொண்டிருக்கிறேன்.

"தமிழ் மொழியின் எற்றத்திற்கும் அதன் வளர்ச்சிக்கும் பாடுபட்ட பெரியவர்களை மதிப்பதில் நான் தவறிழைப்பவன் அல்லன்; அவர்களுக்குக் கிடைக்கின்ற ஏற்றம் குறித்து மிகுந்த மகிழ்ச்சியும், உள்ளத்தில் பெருமிதமும் மிகுதியாகக் கொண்டிருக்கிறேன்.

"முப்பதாண்டுகளுக்கு முன்பு நான் என்ன நினைத்துக்கொண்டிருந்தேனோ அந்தக் கனவு இன்றைக்கு ஈடேறிக்கொண்டிருக்கிறது.

"இன்றைக்குப் பலர் கவிதை நடையிலே அரிய பெரிய கருத்துக்களை ஆக்கித்தந்து தமிழுக்கு சிறந்த தொண்டினைச் செய்து வருகிறார்கள் என்பதை நான் பார்க்கின்றபோது மெத்த மகிழ்ச்சியடைகிறேன்.

"இத்தகைய சிறப்பு விழாக்கள் தமிழுக்கு உழைத்த பெரியவர்களுக்கு நாம் காட்டும் மரியாதை மட்டும் அல்ல; அவர்களது அறிவாற்றலுக்கு -- அரிய பெரிய கருத்துக்களுக்கு மரியாதையும் வணக்கமும் செலுத்துவதாகும்.

"தமிழ் மொழிக்கு ஏற்றம் இருக்கவேண்டும் -- அதை எங்கெந்த வகையில் ஏற்படுத்த வேண்டும் -- என்பவைகளைச் சொல்லும்போது எளிதாக இருக்கின்றது; ஆனால் அவைகளை செயலில் கொண்டுவரும்போது சிக்கல்கள் இருப்பதை -- ஏற்படுவதை உணருகிறேன்; 'இது எளிதான காரியம்' என்று சிலர் கூறலாம்; ஆனால் என்னைப்போல சிக்கலில் மாட்டிக் கொண்டவர்கள் இப்படிக் கூறமாட்டார்கள்!

"என்றாலும், இதில் எவ்வளவு சிக்கல்கள் ஏற்பட்டாலும் -- எத்தகைய குறுக்கீடுகள் இடைமறித்தாலும் எனது முழுவலிவையும் தமிழ் மொழியின் ஏற்றத்திற்கே பயன்படுத்துவேன் என்ற உறுதியைத் தெரிவித்துக்கொள்கிறேன்."

---முதலமைச்சர் அண்ணா

(பச்சையப்பன் கல்லூரியில் டாக்டர் மு. வரதராசனார் உருவப் படத் திறப்பு விழாவில்)

மதுவிலக்கின் கதி என்ன?

காங்கிரசாரிடையே கருத்து வேற்றுமை

தலைமை அமைச்சர் நிலை?

புதுடில்லி, ஆக. 12—

காங்கிரசு நாடாளுமன்றக் குழு, மதுவிலக்குப் பிரச்சினையில் இரு கூறாகப் பிரிந்து நிற்கிறது.

சென்ற கிழமை நடைபெற்ற கூட்டத்தைப்போலவே இன்றையக் கூட்டத்திலும் மதுவிலக்கை நீக்கக் கோரிப் பலரும் வற்புறுத்தியிருக்கின்றனர்.

ஆனால், காந்தியத் தத்துவமான மதுவிலக்கை நாடு முழுவதும் அமுலாக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டும் சிலர் பேசியிருக்கின்றனர்.

கூட்டத்திற்குத் தலைமைதாங்கிய தலைமையமைச்சர் இந்திரா காந்தி, கருத்து எதுவும் தெரிவிக்கவில்லை.

காங்கிரசுச் செயற்குழுவின் முடிவிற்காகத் தாம் காத்திருப்பதாக அவர் கூறினார்.

மருந்துக்குக் கொள்ளை விலை!

சாதாரணக் குடிமகன் தருகின்ற இழிநிலை!

மக்களவையில் கண்டனம்

புதுடில்லி, ஆக. 12—

மத்திய அரசு காப்புரிமை சம்பந்தமாகச் சட்டமியற்றப்படுவதில் வீண் காலதாமதம் செய்யப்படுவதை நாடாளுமன்ற மக்களவையில் பல கட்சி உறுப்பினர்களும் கடுமையாகக் கண்டித்தனர்.

இது சம்பந்தமாக மசோதா ஒன்று அரசினரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய பலரும், 'மருந்து உற்பத்தித் தொழிலில் வெளிநாட்டினரின் ஏகபோகப் பிடியிலிருந்து இந்தியாவை விடுவித்தாலன்றி சாதாரணக் குடிமகன் மருந்துக்குக் கொள்ளை விலை கொடுப்பதைத் தடுக்கமுடியாது' என்று கூறினர்.

மசோதாவை ஆதரித்துப் பேசிய சுசேதா கிருபளானி, பல ஆண்டுகளுக்கு முன்பே இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்க வேண்டுமென்றும், காப்புரிமை கேட்டுவந்த 6,000 மனுக்கள் இன்னமும் தீர்மானிக்கப்படாமல் இருப்பது, 'அரசாங்கம், இயங்காமல் வலிவிழந்து கிடப்பதையே காட்டுகிறது' என்றும் குறை கூறினார்.

கழக உறுப்பினர் இரா. செழியன் அவர்களும், 'ஆராய்ச்சியையும் திறமையையும் ஊக்குவிக்க இம்மசோதா அவசியம் நிறைவேற்றப்பட வேண்டும்' என்று கேட்டுக்கொண்டார்.

நாடற்றவர்களுக்குக் குடியுரிமை

திட்டம் விரைவில் செயல்படும்

"இந்தியா—இலங்கை ஒப்பந்தப்படி தற்பொழுது நாடற்றவர்களாக இருக்கும் நபர்களுக்கு இலங்கைக் குடியுரிமை வழங்கும் திட்டம் விரைவில் செயல்படும்"

என்று இலங்கை வெளிநாட்டு உறவுத் துறை அதிகாரி ஒருவர் கூறினார்.

இதுவரையிள் 5,000 பேர்கள் குடியுரிமைக்காக மனுச் செய்துள்ளனர் என்றும், இம்மனுக்கள், சம்பந்தப்பட்டவர்களால் பரிசீலனை செய்யப்படும் என்றும் அவர் கூறினார்.

வாடகை தராத முன்னாள் மத்திய அமைச்சர்கள்!

புதுடில்லி, ஆக. 14—

"முன்னாள் மத்திய அமைச்சர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர், கடந்த சூன் 30-ம் நாள் வரை தரவேண்டிய வாடகை பாக்கி ரூ. 1.49 இலட்சமாகும்"

என்று மக்களவையில், அமைச்சர் இக்பால் சிங் தெரிவித்தார்.

தமிழகம் திரும்பும் இலங்கை அகதிகள்

மறுவாழ்வு பெற தமிழக அரசு முயற்சி

சென்னை, ஆக. 14—

இவ்வாண்டு இறுதியில் இலங்கையிலிருந்து முதல் குழுவினர் சுமார் 4000 பேர் வரை இந்தியா திரும்புவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

அடுத்து 15 ஆண்டுகளில்--ஆண்டுதோறும் 35,000 பேர் என்ற விகிதத்தில் சுமார் 5-இலட்சம் பேர்வரை இந்தியா வந்து சேரலாம்.

இதுவரையில் தாமாகவே விரும்பி வெளியேறி வந்தவர்கள் யாரும் அரசிடம் மறுவாழ்வுக்கான உதவி எதுவும் கோரவில்லை.

இலங்கையிலிருந்து திரும்புவோர்களை மலைத் தோட்டங்களில் குடிமயர்த்த இயலக்கூடிய எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன.

நீலகிரியில் தேயிலைத் தோட்டங்களில் சுமார், 1,500 குடும்பங்களும், கன்னியாகுமரியில் ரப்பர் தோட்டங்களில் சுமார் 3,000 பேர் வரையிலும் குடியமர்த்தப்படுவர்.

திருச்சி, வட ஆற்காடு, இராமநாதபுரம், மதுரை, தஞ்சை போன்ற மாவட்டங்களில சாகுபடிக்கு இலாயக்கில்லாத நிலங்களைச் சாகுபடிக்குக்கு இலாயக்குள்ளதாக ஆக்குவதற்காக அகதிகளில் ஒவ்வொரு குடும்பத்துக்கும் 4 முதல் 5 ஏக்கர் நிலத்தை வழங்கவும் அரசு திட்டமிட்டுள்ளது.

கிணறுகளைத் தோண்டவும் அரசு நிதியுதவி அளிக்கும்.

அகதிகள் முயற்சிகளை மேற்கொண்டால், கூட்டுறவுப் பண்ணைகளை அமைத்துக்கொள்ளவும் அவர்களுக்கு அரசு உதவி அளிக்கும்.

இந்தியாவுக்கு அனுப்பப்படும் பர்மா அகதிகள் எண்ணிக்கை குறைகிறது

தமிழகத்தில் மறுவாழ்வு பெறுவோர் விவரம்

சென்னை, ஆக. 14—

கடந்த நான்கு ஆண்டுகளில் 1.60 இலட்சம் அகதிகள் பர்மாவிலிருந்து வந்துள்ளனர்; இவர்களில் 86,000 பேர்வரை தமிழகத்துக்கு வந்துள்ளனர்.

அக்டோபரிலும், டிசம்பரிலும் பர்மாவிலிருந்து 5,000 அகதிகள் சென்னைக்கு வந்து சேருவர்; 5 கப்பல்களில் வரும் இவர்களில் 2,000-பேர் அக்டோபரிலும், மற்றும் 3,000-பேர் டிசம்பரிலும் வருவார்கள்.

இந்தியாவுக்குத் திருப்பியனுப்பப்படும் இந்தியர்கள் எண்ணத்தை குறைந்துவருவதாகவும டிசம்பரில் வருவோர்தான் இறுதிக் குழுவினராக இருப்பர் என்றும் அதிகாரிகள கருதுகிறார்கள்.

"அக்டோபரில் 2,000 அகதிகள் வருகின்றனர்; இவர்களில் 600-முதல் 800-பேர் வரை இதர மாநிலங்களுக்குச் செல்வர்"

என்று மறுவாழ்வுத் துறை இயக்குநர் டி. கே. ஓசா, நிருபர்களிடம் தெரிவித்தார்; அவர் மேலும் தெரிவித்ததாவது:—

அகதிகளில் வியாபாரத் துறையில் ஈடுபட்டிருந்த 27,000-பேருக்கு மீண்டு வியாபாரத்தில் அவர்களை ஈடுபடுத்துவதற்குக் கடனுதவி அளிப்பதற்காக அரசு ரூ 31-இலட்சம்வரை அனுமதித்தது; இவர்கள் ஒவ்வொருவருக்கும ரூ. 800 முதல் ரூ 2,000-வரையிலும், சிலருக்கு இன்னும் சற்று கூடுதலாகவும் கடனுதவி அளிக்கப்பட்டது.

'பர்மா பஜார்' உட்பட 300-த்துக்கும் அதிகமான 'பங்க்' கடைகள் அகதிகளிடமே உள்ளன; இவற்றை அரசு கட்டியதாகும்; போட்டி காரணமாக, சிறு கடைகளை வைத்து நடத்துவது இலாபகரமாக இராது என இவர்கள் கருதுகிறார்கள்.

32 தொழில் பயிற்சி நிலையங்களிலும் 600-க்கும் அதிகமான இடங்கள் பர்மா அகதிகளுக்காக ஒதுக்கப்பட்டன. ஆனால் இவற்றில் சேர அதிகம்பேர் முன்வரவில்லை

இதில் சேர்ந்து படிப்பவர்களுக்கு ரூ. 55 உதவித் தொகையாகத் தரப்பட்டபோதிலும், சுமார் 100 பேர்தான் சேர்ந்துள்ளனர்

மைசூர் மாநிலத்தில் மலைத் தோட்டங்களுக்குச் சென்று வேலை செய்ய விரும்பும 4000 குடும்பங்களின் பெயர் விவரங்களை மாநில அரசு திரட்டி வருகிறது.

பகுத்தறிவு மறுமலர்ச்சி காண விரும்பினர்

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் படத்திறப்பு---அமைச்சர் மு. கருணாநிதி பெருமிதம்

"மறைந்துவிட்ட புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், நம்முடைய உயிரிலும் உணர்விலும்—மூச்சிலும் இரத்தத்திலும் ஒன்றி விட்டவராவார்!

"நம்முடைய இதயத்திலெல்லாம்—நாம் பேசும் உச்சரிப்பிலெல்லாம்- நாம் பேசும் தமிழிலெல்லாம் அவர் நிறைந்து நிற்கிறார்! அவரது கவிதைகள் நம்மிடையே நின்று நிலவுகின்றன!

"அவர் ஆற்ற விரும்பிய பணிகளை -அவர் விரும்பிய பகுத்தறிவு மறுமலர்ச்சியை—அவர் காண விரும்பிய கனவுகளை நாம் நனவாக்கவேண்டும்"

என்று, பொதுப்பணித் துறை அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள் பச்சையப்பன் கல்லூரியில், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் உருவப் படத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில் கேட்டுக்கொண்டார்.

இராணுவ அதிகாரிகள் உட்பட 800 கம்யூனிஸ்டுகள் கைது

ஜாகர்தா, ஆக. 14—

ஐந்து உயர்தர இராணுவ அதிகாரிகள் உட்பட 800 கம்யூனிஸ்டுகள் கைது செய்யப்பட்டிருப்பதாக இந்தோனேசிய இராணுவத்தின் தளபதிகள் இருவர் கூறியுள்ளனர்.

இராணுவம் மேற்கொண்டுள்ள கம்யூனிஸ்டுத் தடுப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாகவே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனராம்.

40 பீரங்கிகள் இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டிருப்பதாகவும் அவர்கள் கூறினர்.

ஆனால் அதிகாரப் பற்றற்ற தகவல்களின்படி இந்த இராணுவ நடவடிக்கை காரணமாக 50 பேர் கொல்லப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

...வெள்ள அபாயப் பகுதிகளில் ...குடியேறுவதைத் தடுக்கச் சட்டம்

...மக்களவையில் அமைச்சர் அறிவிப்பு

புதுடில்லி, ஆக. 12—

"...ஆற்று ஓரங்களிலும், 'வெள்ளத்தால் அபாயமேற்படும்' என்று கருதப்படும் இதர பகுதிகளிலும் மக்கள் குடியேறுவதைத் தடுப்பதற்குச் சட்டம் ஒன்று கொண்டுவர முயற்சி செய்யப்படுகிறது"

...ன, மத்திய நீர்ப்பாசன அமைச்...ர் கே. எல். ராவ், மக்களவையில் அறிவித்தார்.

நாடெங்கும் ஏற்பட்டுள்ள வெள்ளக் கொடுமைபற்றி நடைபெற்ற நான்கு மணி நேர விவாதத்தின்போதே அமைச்சர் மேற்கண்டவாறு அறிவித்தார்.

முன்னறிவிப்புத் தராதது உண்மைதானும்

"குசராத்திலும், குசராத்தின் இதர பகுதிகளிலும் ஏற்பட்ட வெள்ளத்திற்குமுன், மக்களுக்கு உரிய நேரத்தில் முன்னறிவிப்புத் தரவில்லை என்பது உண்மைதான்"

என்பதை டாக்டர் ராவ் ஒத்துக்கொண்டார்.

வெள்ளத்தின்போது 144 தடை உத்தரவு

உறுப்பினரின் வியப்பு

எந்த நிகழ்ச்சியையும் சட்ட-ம்-ஒழுங்கு கண்ணோட்டத்துடன் அரசு கவனிக்கிறதா?

விவாதத்தைத் துவக்கிவைத்துப் பேசிய சுரண் சிங் ஸ்ரீதரன், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கேரளத்திற்கு வருகை தராமலிருந்த தலைமையமைச்சரின் நடவடிக்கையைக் கண்டித்தார்.

மேலும் அவர், திரிபுராவில் அண்மையில் பிரம்மபுத்திரா ஆறு வெள்ளப் பெருக்கெடுத்தபோது அப்பகுதி அதிகாரிகள் 144 தடை உத்தரவு போட்ட நிகழ்ச்சி பற்றி வியப்புத் தெரிவித்தார்.

"எந்த நிகழ்ச்சியையும் அரசு, சட்டம் — ஒழுங்கு கண்ணோட்டத்துடன்தான் கவனிக்குமா?" என்றும் அவர் கேட்டார்.

வெள்ள நிவாரணப் படை உருவாக்கப்படுமாம்

"குறுகிய கால அழைப்பின்மீது வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப் பணிகளைத் துரிதமாக மேற்கொள்ளுவதற்கு நிரந்தரமாக வெள்ள நிவாரணப் படை ஒன்றை நிறுவ அரசு எண்ணியிருக்கிறது"

என்று, நாடாளுமன்ற மேலவையில் பாசன-மின்சாரத் துறை அமைச்சர் டாக்டர் கே. எல். ராவ் தெரிவித்தார்.

அவதியுறுவோருக்கு உதவும் இயக்கம் துவக்கம்

அகமதாபாத், ஆக. 12—

வெள்ளத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கும் குசராத் மக்களுக்கு எல்லாவித உதவியும் செய்ய நாட்டின் பல பகுதி மக்களும் முன்வந்திருக்கின்றனர்.

குசராத் மாநிலத்தில், 'உதவிகளைப் பெற்று -- துன்பப்படுவோருக்கு வழங்கும் இயக்கம்' ஒன்று துவங்கப்பட்டிருக்கிறது.

வீடின்றி 10,000 பேர் தவிப்பு

ஒரிசாவில் ஆறுகளில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாகக் குறைந்தது 10,000 பேராவது வீடின்றி தவிக்கக்கூடும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

இதுபோல், பீகார் மாநிலத்திலும் ஏராளமான மக்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வெள்ளத்தால் ரூ. 30 கோடி நட்டம்

புதுடில்லி, ஆக. 11—

"நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இந்த ஆண்டில் ஏற்பட்ட வெள்ளத்தால் ரூ. 30 கோடி அளவுக்கு நட்டமேற்பட்டிருக்கிறது; இதில் பயிர்ச் சேதம் மட்டும் ரூ. 22 கோடியாகும்"

என்று நாடாளுமன்ற மேலவையில் நீர்ப் பாசனத்துறை அமைச்சர் டாக்டர் கே. எல். ராவ் தெரிவித்தார்.

தொழில் துறையில் ரூ. 27 கோடி நட்டம்

சூரத், ஆக. 12—

தப்தி வெள்ளத்தினல் சூரத் நகரின் தொழில்—வர்த்தகத்துக்கு சுமார் ரூ. 27 கோடி நட்டம் ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது.

செயற்கைப் பட்டுத் தொழிலுக்கு மட்டும் ஏற்பட்டுள்ள நட்டம் ரூ. 15 கோடி; மொத்தமுள்ள 40,000 செயற்கைப் பட்டு விசைத் தறிகள் நாசமாகிவிட்டனவாம்.

எஞ்சினீயரிங் தொழிற்சாலைகளுக்கு ஏற்பட்டுள்ள நட்டம் ரூ. 1 கோடி, சரிகை, வைரம் பட்டைத் தீட்டும் தொழில்களுக்கும் இதே அளவு நட்டம் ஏற்பட்டிருக்கிறது.

வெள்ளத்தில் சுமார் ரூ. 1 கோடி பெறுமான நூல் பாழாகிவிட்டது.

இ...

அ...

கழ...

தொ...

செய்துவிட்ட ...

கடந்து உணர்ந்தது டெல்லி!

புதுடில்லி, ஆக. 14—

இந்தியாவின் இமாலயப் பகுதியில ஆராய்ச்சி நடத்திக்கொண்டு வரும் கலிபோர்னியா பல்கலைக் கழகத்துக்கு, மேலும் அங்கு தொடர்ந்து ஆராய்ச்சி நடத்த இந்திய அரசு அனுமதி வழங்காது எனத் தெரியவருகிறது.

சென்ற வாரம், நாடாளுமன்றத்தில், இத்திட்டம் செயல்படுவது சம்பந்தமாகப் பலத்த கண்டனங்கள் எழுதப்பட்டன.

1960-ம் ஆண்டு முதல் இத்திட்டம் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் செலவுக்காக அமெரிக்காவின் பல கல்வி அற நிறுவனங்களும் உதவிபுரிந்து வந்திருக்கின்றன; ஆனால், 1967-ல் இத்திட்டத்திற்காக 60 சதவிகிதச் செலவையும் அமெரிக்காவின் 'உயர்தர ஆராய்ச்சித் திட்டக் குழு' அளித்திருக்கிறது; இந்திய அரசுக்கும் இது தெரிவிக்கப்பட்டது.

இக்குழு, அமெரிக்கப் பாதுகாப்புத் துறையின்கீழ் இயங்கிவருகிறது என்பது தெரியாததால், எவ்வித எதிர்ப்பையும் அப்போது இந்திய அரசு இதற்குக் காட்டவில்லை.

அண்மையில், அமெரிக்க செனட்டின் வெளிநாட்டு உறவுத் துறைக் குழுவின் முன், இராணுவ அதிகாரி ஒருவர் தந்த விளக்கத்தின்போதுதான் இது தெரியவந்தது.

எந்தவிதப் பிரதிபலனையும் எதிர்பாராமல், அமெரிக்கப் பாதுகாப்புத்துறை இவ்வளவு பெருந் தொகை செலவு செய்யாது என்றும், எனவே, இவ்வாராய்ச்சிப் பணியை உடனடியாக நிறுத்த வேண்டுமென்றும் மக்களவையில் பலரும் வற்புறுத்தினர்; தலைமை அமைச்சரும், இதைக் கவனிப்பதாகக் கூறியிருந்தார்.

இது தொடர்பாகவே, 'இனியும் இது இயங்க வேண்டியதில்லை' என்று அறிவிக்கப்பட்டிருப்பதுடன், சம்பந்தப்பட்ட அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் இந்தியா வருவதற்கு அனுமதி தரவும் இந்திய அரசு மறுத்துவிட்டிருக்கிறது

"இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கைமுற்றிலும் திருத்தி அமைக்கப்பட வேண்டியதாயுள்ளது. அப்படிப்பட்ட கொள்கையின் முக்கியப்பணி நம்முடைய தனித் தன்மையை மீண்டும் நிலை நிறுத்துவதாக இருக்க வேண்டும்"

"நாட்டின் நலன்களைப் பாதுகாப்பதைவிட இந்திய அரசு, மற்றநாடுகளுடனுள்ள நேசத்தைப் பாதுகாப்பதில் அதிகக் கவலை காட்டுகிறது.

"'நேசம்' என்பதற்கு இந்தியா தரும் விளக்கம், அசாதாரணமானது; இந்த விளக்கம், எப்போதுமே நாட்டின் நலனை பலியிடுவதாகவே இருக்கிறது"

என்றெல்லாம் பி. சோ. கட்சித் தலைவர் நாத்பாய், செய்தியாளரிடை பேசுகையில் தெரிவித்தார்.

ரூ.1,015.26 கோடி

1968--69-ம் ஆண்டில் பாதுகாப்புச் செலவு

புதுடில்லி, ஆக. 12—

"1968—69-ம் ஆண்டில் பாதுகாப்புச் செலவு ரூ. 1,015.26 கோடியாக இருக்கும்"

என்று, பாதுகாப்பு அமைச்சர் சர்தார் சுவரண் சிங் மக்களவையில் தெரிவித்தார்.

"தரைப் படைக்காக ரூ. 770.34 கோடியும், கடற் படைக்காக ரூ. 56.5 கோடியும், விமானப் படைக்காக ரூ. 188.87 கோடியும் செலவிடப்படும்.

"முப்படைகளிலும் நவீன இயந்திரங்களை அதிக அளவில் பயன்படுத்தத் துவங்கியிருக்கிறோம். நாட்டின பாதுகாப்புக்கு ஏற்படக்கூடிய எந்த அபாயத்தையும் சமாளிக்கும் வகையில் இராணுவத்தின் ஆற்றலையும், திறமையையும் அதிகமாக்கும் பொருட்டு இவ்வாறு செய்யப்படுகிறது" என்றும் அவர் கூறினர்.

... சிலர் -- ... ர்களிடம் வைத்து... ம்பிக்கைதான் இதற்குக் காரணம்' என்று கூறினர்.

சென்னை 23-வது வட்ட எம். ஜி. ஆர். மன்றம்

மேற்படி மன்றத்தின் புதிய நிர்வாகிகள் தேர்தல் 7—8—68-ல் தோழர் எஸ். எஸ். திராவிடமணி (23-வது வட்டச் தி. மு. க. செயலாளர்) அவர்களை ஆணையாளராகக் கொண்டு நடைபெற்றது; தேர்ந்தெடுக்கப்பட்டோர்: — தலைவர்: சி. சொக்கநாதன்; துணைத் தலைவர்: இரா. குலசேகரன்; செயலாளர்: இரா. வெங்கடேசன்; துணைச்செயலாளர்: பி. காசிராசன்; பொருளாளர்: எம். சி. குடபுசாமி; செயற்குழு உறுப்பினாகள்: ஆர். எஸ். மூர்த்தி, கே. ஆறுமுகம, எஸ். கே. சாமி, கே. என். கமருதீன், எஸ். தயாளன், து. மு. நடராசன், எஸ். எஸ். மணி, கே. எம். துரை.

திருமதி லூதர் கிங் இந்தியா வருகை

ஆக்ரா, ஆக. 14—

படுகொலை செய்யப்பட்ட அமெரிக்க நீக்ரோ மக்கள் தலைவர் மார்டின் லூதர் கிங்கின் துணைவியார் இந்த ஆண்டு நவம்பர் திங்களில் இந்தியாவுக்கு வருகை தரக்கூடும்.

மார்டின் லூதர் கிங்கின் நினைவாக, இன வேறுபாடு பற்றிய கருத்தரங்கு ஒன்று இந்தியாவில் நடைபெறவிருக்கிறது; இக்கருத்தரங்கில் கிங்கின் மனைவியும் கலந்துகொள்ள அழைக்கப்பட்டிருக்கிறாராம்.

சட்டமன்ற உறுப்பினர் எஸ். ஆறுமுகம்

மருத்துவமனையில் அனுமதி

சேலம் வட்டம் வீரபாண்டி தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ். ஆறுமுகம் அவர்கள், திடீரெனறு ஏற்பட்ட மார்பு வலியின் காரணமாக சேலம் அரசினர் தலைமை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

காங்கிரசல்லாத அரசுகளைக் கவிழ்க்க காங்கிரசுத் தலைவர்களின் திட்டம்

கேரள முதலமைச்சர் வெளியிடும் தகவல்

ஜெய்ப்பூர், ஆக. 14—

"கேரளத்தைப் புறக்கணிக்கும் மத்திய அரசின் போக்கு, கேரளத்துக்கு மட்டும் அதைச் செய்வதன்று; எல்லா காங்கிரசல்லாத அரசுகளிடமும் காட்டும் பாரபட்சப் போக்கின் ஒரு பகுதியேயாகும்"

என்று கேரள முதலமைச்சர் நம்பூதிரிபாடு பொதுக்கூட்டமொன்றில் பேசுகையில் கூறினர். மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

"மத்திய அரசின் இந்தத் தாக்குதல்கள், பலவிதத்திலும் அமைந்திருக்கின்றன.

"கேரளம் அல்லது வங்கத்துடன் கடைபிடிக்கும் போக்கு ஒரு மாதிரியாக இருக்கும்; அது தமிழகத்தில் வேறு மாதிரியில் இருக்கும்; இவைகளிலிருந்து முற்றிலும் மாறுபட்ட முறையில் உத்தரப்பிரதேசத்திலோ, பஞ்சாபிலோ செயல்படும்; ஆக மொத்தத்தில் காங்கிரசல்லாத அரசுகளை அகற்ற வேண்டுமென்பதே மத்திய காங்கிரசுத் தலைவர்களின் நோக்கமாகும்."

ஆகஸ்டு 15 : சென்னை - கோடம்பாக்கத்தில்

விடுதலை நாள் விழாப் பொதுக்கூட்டம்

★

15--8--68 இரவு 7-மணிக்கு

கண்ணு மேஸ்திரி திடலில்

('பேசும்படம்' எதிரில்)

தலைவர் : ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ.

தமிழக முதல்வர்

பேரறிஞர் அண்ணா

அவர்களும்

மற்றும் அமைச்சர்களும் பேசுவர்.

—விடுதலை நாள் விழாக் குழுவினர் (தி மு.க.)

குறிப்பு : சென்னை திருவல்லிக்கேணி கடற்கரையில் நடைபெறுவதாக இருந்த இந்தக் கூட்டம், கண்ணு மேஸ்திரி திடலில் நடப்பதாக மாற்றப்பட்டிருக்கிறது.

கலை நிகழ்ச்சி

செம்படாபாளையம் தி. மு. க. சார்பில் 16-8-68 மாலை 7-மணிக்கு ஊராட்சிப் பொது மேடையில், எஸ். கே. சாமியப்பன் தலைமையில், சிவகங்கை சேதுராசன் குழுவினரின் 'ஆளுகின்றார் அண்ணா' எனும் கலை நிகழ்ச்சி நடைபெறும்.

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

படுத்தப்பட்டன; அவற்றையும் மிஞ்சும் வகையில்—அதைவிட 10 சதவிகிதம் அதிக விளைச்சல் தரும் —இந்தப் புதிய கோதுமை உள்ளது.

தமிழ் வெளியீட்டுக் கழக நூல்கள் வெளியீட்டு விழா

15—8—68 மாலை 6-30 மணியளவில் இராஜாஜி மண்டபத்தில், தமிழ் வெளியீட்டுக் கழக நூல்கள் 6-வது வெளியீட்டு விழா, கல்வி அமைச்சர் திரு.. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் நடைபெறும்; பொதுப் பணித் துறை அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள், புகுமுக வகுப்புக் கணித---விஞ்ஞானத் துறை நூல்களை வெளியிடுவார்; வரவேற்பு : மு. ரா. பெருமாள்.

விழுப்புரம் வட்ட தி.மு.க. மறுதேர்தல்

விழுப்புரம் வட்ட தி. மு. கழக மறுதேர்தல் (எல்லா பொறுப்புகளுக்கும்) 28--8--68 காலை 10 மணிக்கு விழுப்புரம் நகர் பயனியர் விடுதியில் நடைபெறும்; தேர்தல் ஆணையாளர்: சா. கணேசன் எம்.சி.; இத்தேர்தலில் போட்டியிட விரும்பி, ஏற்கனவே அனுப்பியுள்ள விண்ணப்பங்களின் அடிப்படையிலேயே தேர்தல் நடைபெறும்.

தலைமைக் கழகம் (தி.மு.க.)

சேலம் மாவட்ட தி. மு...

ஏற்கனவே விடுததிருந்த அறிவிப்பினையொட்டி சே... மாவட்ட தி. மு. க. தேர்தல் 25—8—68 ஞாயிறு காலை 10 மணிக்கு சி. சிட்டிபாபு எம்.பி. அவர்களை ஆணையாளராகக் கொண்டு சேலம் நகர் விசயராகவாச்சாரியார் திடலில் நடைபெறும்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

...தெ. ஆ. மாவட்டக் கழகத் தேர்தல்

தென் ஆற்காடு மாவட்டக் கழகத் தேர்தல், 31--8—68 அன்று காலை 10 மணிக்கு கடலூர் என். டி. வர்த்தகர் சங்கக் கட்டிடத்தில் நடைபெறும்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

நீலகிரி மாவட்டக் கழகத் தேர்தல்

நீலகிரி மாவட்டக் கழகத் தேர்தல் 18—8—68 காலை 10 மணிக்கு உதகை நகரிலுள்ள தி. மு. கழகக் கட்டிடத்தில் நடைபெறும். தேர்தல் ஆணையாளர் : வை. இரத்தினவேலு பி ஏ.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

கோவை மாவட்ட தி. மு. க. தேர்தல்

ஏற்கனவே விடுத்திருந்த அறிவிப்பினையொட்டி கோவை மாவட்ட தி. மு. கழகத் தேர்தல் 18—8—68 காலை 10-மணிக்கு கோவை நகரக் கழகக் கட்டிடத்தில் ஆணையாளர் ப. உ. சண்முகம் எம்.எல்.சி. அவர்கள் தலைமையில் நடைபெறும்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

நாமக்கல் வட்ட தி. மு. க. தேர்தல்

ஏற்கனவே விடுத்திருந்த அறிவிப்பினையொட்டி 20—8--68 செவ்வாய் காலை 10 மணிக்கு நாமக்கல் பி எஸ். ஆர். திடலில் நாமக்கல் வட்ட தி. மு. க. தேர்தல் நடைபெறும். தோழர் ஓ. எஸ். பாலசுந்தரம், தேர்தல் ஆணையாளராகப் பொறுப்பேற்றுத் தேர்தலை நடத்தி வைப்பார்.

11—8—68 அன்று நடைபெறவிருந்த வட்டக் கழகத் தேர்தலுக்கு அனுப்பப்பட்ட பிரதிநிதிகள் அடையாளச் சீட்டுகளையே கொண்டுவர வேண்டுகிறோம்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

சிதம்பரம் வட்ட தி.மு.க. தேர்தல்

சிதம்பரம் வட்டக் கழகத் தேர்தல் நடைபெறும் நாள் உள்ளிட்ட விவரங்கள் விரைவில் அறிவிக்கப்படும்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

அறிஞர் அண்ணா அறிவுக்கூடம்

அடிக்கல் நாட்டுவிழா

சென்னை — வேளச்சேரியை அடுத்த பள்ளிக்கரணையில் அறிஞர் அண்ணா அறிவுக்கூடம் அமைக்கப்படுகிறது; அதற்கான அடிக்கல் நாட்டுவிழா, 16--8--68 மாலை 5 மணிக்கு நடைபெறும்.

விழாவுக்கு, கல்வித்துறை அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமை தாங்குகிறார்; பொதுப் பணித்துறை அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள் அடிக்கல் நாட்டுகிறார்.

நாவலர் நெடுஞ்செழியன் சதுக்கத்திற்கு செய்தித் துறை அமைச்சர் சத்தியவாணிமுத்து அவர்கள் அடிக்கல் நாட்டுகிறார்.

கலைஞர் கருணாநிதி சதுக்கத்திற்கு சி. பி. சிற்றரசு எம்.எல்.சி. அவர்கள் அடிக்கல் நாட்டுகிறார்.

கே. ஏ. மதியழகன் சதுக்கத்திற்கு திரு. சி. பா. ஆதித்தனார் எம்.எல்.ஏ. அவர்கள் அடிக்கல் நாட்டுகிறார்.

என். வி. நடராசன் சதுக்கத்திற்கு வேளாண்மைத் துறை அமைச்சர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் அடிக்கல் நாட்டுகிறார்.

சத்தியவாணிமுத்து சதுக்கத்திற்கு திரு. ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ. அவர்கள் அடிக்கல் நாட்டுகிறார்.

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். சதுக்கத்திற்கு உணவுத்துறை அமைச்சர் கே. ஏ. மதியழகன் அடிக்கல் நாட்டுகிறார்.

விழாவில் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அறிஞர் அண்ணா அறிவுகூடத் தலைவர் என். வி. நடராசன் அவர்கள் கேட்டுக்கொள்கிறார்.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

15--8--68

சிவகாசி

அண்ணா மன்றச் சார்பில் இரவு 7-மணிக்கு மாரியம்மன் கோயில் திடலில் ; தலைவர் : கு. சீதாலட்சுமி ; பேசுவோர் : கஸ்தூரி பி.எஸ்சி., கோ. வரதராசன், இராசமாணிக்கம், ஏ. துரைக்கண்ணன், மு. பழனிச்சாமி.

16--8--68

கள்ளக்குறிச்சி

எம். ஜி. ஆர். ரசிகர் மன்றச் சார்பில் மாலை 6-மணிக்கு திருவள்ளுவர் திடலில்; தலைவர் : ஒய். அப்துல் கரீம் ; பேசுவோர்: எஸ். ஏ. கரீம், இரா. நல்லமுத்து, எம். பஸ்லுர் ரகிமான், மு பாண்டியன், கே. பெருமாள் எம்.ஏ.பி.எல்., ஏ. நாகராசன் பி.எஸ்சி.,பி.எல்., எஸ். இராசவடிவேல், கோபால்.

(மதுரை கண்ணம்மா — தங்கராசு குழுவினரின் கலை நிகழ்ச்சி நடைபெறும்.)

சென்னை மாவட்ட தி.மு.க. பிரதிநிதிகட்கு:

★

"18—8—68 ஞாயிறு காலை 10 மணியளவில், தேனாம்பேட்டை 'அன்பகத்'தில், சென்னை மாவட்ட தி. மு. கழகப் பிரதிநிதிகள் கூட்டம் நடைபெறும் ; அதுபோது, பேரறிஞர் அண்ணா அவர்களின் 60-வது பிறந்த நாள் விழாவினைச் சிறப்பாகக் கொண்டாடுவது குறித்து முடிவு செய்யப்படவிருப்பதால், பிரதிநிதிகள் அனைவரும் தவறாது வருகை தருமாறு கேட்டுக்கொள்கிறேன்"

என்று மாவட்டச் செயலாளர் நீலநாராயணன் அறிவிக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு ... அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு ... வெளியிடப்பட்டது.